1994 ஏப்ரல் 26]

இந்த அரசு நடவடிக்கை எடுக்காது. அதை எப்படி, எப்படியெல்லாம் அணுக வேண்டுமோ அப்படி அணுகப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 385, திரு. சி. இராமசுவாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 386, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

386--

கும்பகோணத்தில் மாவட்ட மருத்துவ அலுவலர் அலுவலகம் அமைத்தல்

*21947--**திரு. இராம. இராமநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் மாவட்ட மருத்துவ அலுவலர் அலுவலகம் அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மாவட்ட மருத்துவ அலுவலகம் அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிதி நிலைக்கேற்ப இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு புரட்சிகரமான பேரவையினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்றைய காலை தினம் இங்கே வந்து உட்கார்ந்தவுடன், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனித நல்லாட்சியில் எதற்கும் இல்லை என்று சொல்லாமல், இன்றைக்கு இந்தக் கோப்பு உள்ளது, அரசின் பரிசீலனையில் உள்ளது, நிறைவேற்றப்படும் என்று அந்த உறுதியினைக் கொடுத்ததற்கு தஞ்சை, நாகை-காயிதேமில்லத், திருச்சி போன்ற அனைத்து மாவட்டங்களிலும் இருந்து என்னுடைய கும்பகோணத்திலே இருக்கிற அரசு மருத்துவமனைக்கு வருகிற மக்களின் சார்பாக எனது நன்றிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின்

பொற்பாதம் பணிந்து சமர்ப்பித்துக் கொண்டு, நிர்வாகத்தின் வசதி கருதி, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகை காயிதேமில்லத் மாவட்டம் என்றும், தஞ்சை மாவட்டம் என்றும் பிரிப்பதற்கு முன்னால் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்திருக்கிற நிலையில் இந்த ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல் மற்றும் அலுவலகம் நாகை மாவட்டத்திற்குச் சென்று விட்ட காரணத்தால், அனைத்து மக்களும் கும்பகோணத்திற்கு வந்து பயனைப் பெறுகின்ற நிலையில் இந்த நல்ல திட்டத்தை கும்பகோணத்திற்கு, தஞ்சை மாவட்டத்திற்கு வழங்குகின்ற இந்தக் குறிப்பினை துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியுமா? அதைப்போல கிட்டத்தட்ட 5 லட்சம் மக்கள் பயன் பெறுகின்ற நிலையில் Intensive care unit, further beds, burns ward, administrative block, cardiology, neo-natal wards மற்றும் பிண குளிர் சாதன வசதி, மாடர்ன் கிச்சன் போன்ற வசதிகளோடு அனைத்து மக்களும் பயன்பெறுகின்ற வகையில் இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன். நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். கும்பகோணத்திலே தான் தலைமை மருத்துவ அலுவலகத்தை அமைக்க வேண்டும் என்பது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. ஆனால் உடனடியாக செய்வதற்கு நிதி நிலைமை இடம் கொடுக்காத காரணத்தால் அடுத்த ஆண்டு இது பற்றி ஆய்வு செய்யலாம் என்று இருக்கிறோம். அவர்கள் கேட்ட அத்தனை ஸ்பெஷாலிட்டியும் படிப்படியாக நிதி நிலைமைக்கு ஏற்ப செய்ய முடியுமே ஒழிய ஒரே அளவிலே செய்துவிட முடியாது. எனவே, படிப்படியாக நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-30

திரு. இராம இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்புமிக்க நிதியமைச்சர் இங்கே அமர்ந்திருக்கின்ற நிலையில் இந்த மாவட்டத்தினுடைய மருத்துவ அலுவலகத்தையும், மருத்துவமனையையும் கும்பகோணத்திலே அமைப்பதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் அவர்களை துரிதப்படுத்த வேண்டும். அதனை இந்த ஆண்டே நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுத்து அந்த மக்களுடைய பிரச்சினைகளையும், மக்களுக்கு நிரந்தரமான வாழ்வு கொடுத்திருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நல்லாட்சிக்கு நல்ல பெயரை ஏற்படுத்துகின்ற

1994 ஏப்ரல் 26]

விதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் மூலமாக இதனை துரிதமாக ஏற்படுத்திக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இது அவருடைய கேள்வி இல்லை என்று சொன்னாலும்கூட முழுமையாக நிதியுதவியை எங்களுடைய கும்பகோணத்திற்கு அளித்து உதவிடுவீர்களா என்பதை நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக எனக்கு பதில் கொடுப்பீர்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது அமைச்சர்களுடைய இருக்கைகளுக்குப் பக்கத்திலேயும் அமைதி காக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் நல்ல நிதியமைச்சர். அதுமட்டும் அல்ல துரிதமாகச் செயல்படக் கூடியவர்தான். எனவேதான் நிதிப் பிரச்சினை எவ்வளவு இருந்தாலும் அதை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் சொல்லுகின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற திறமை அவர்களுக்கு இருக்கிறது. இந்த ஆண்டு அதைச் செய்வது என்பது கடினம் என்று எனக்கே தெரிகிறது. எனவே, அடுத்த ஆண்டு நிதியமைச்சர் அவர்களிடத்திலே இதைப்பற்றி பேசி அந்த ஆண்டினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப அன்றைய நிலையை கவனத்திலே எடுத்துக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 387, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 388, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

388--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை அமைத்தல்.

*** 23428–டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –